தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

18-04-2021

வழக்கை திரும்பப்பெற மிரட்டல்

# அமமுக வேட்பாளருக்கு குற்றச்சாட்டு நகல்

மதுரை

காவல் நிலைய மரணம் தொடர்பான வழக்கை திரும்பப்பெற மிரட்டியது தொடர்பாக திருமங்கலம் அமமுக வேட்பாளர் உட்பட 4 பேருக்கு குற்றச்சாட்டு நகல் வழங்கப்பட்டது.

மதுரை சோலையழகுபுரத்தைச் சேர்ந்தவர் பாலமுருகன். இவரை கடத்தல் வழக்கில் அவனியாபுரம் போலீஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் பாலமுருகன் உயிரிழந்தார். போலீஸார் அவரை அடித்துக் கொலை செய்ததாகவும், மறு பிரேதப் பரிசோதனை நடத்தவும், இழப்பீடு வழங்கக் கோரியும் பாலமுருகனின் தந்தை முத்துக்கருப்பன் உயர் நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை அவர் திடீரென திரும்பப் பெற்றார்.

இது தொடர்பாக வழக்கறிஞர் ஹென்றி டிபேன், உயர் நீதிமன்ற நிர்வாக நீதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார். அதில் போலீஸாரின் அச்சுறுத்தல் காரணமாக முத்துக்கருப்பன் தனது மனுவை திரும்பப் பெற்றுள்ளார். இவரை மிரட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது. இந்த மனுவை உயர் நீதிமன்றக் கிளை தாமாக முன்வந்து பொதுநல வழக்காக விசாரித்தது. அதில், பாலமுருகன் மரணம் தொடர்பான வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற உத்தரவிட வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது, முத்துக்கருப்பனை மிரட்டியது தொடர்பான ஆடியோ உரையாடல் தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து போனில் மிரட்டிய ஆதிநாராயணன், கதிர், லோகநாதன், ரமேஷ் ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, திருமங்கலம் தொகுதி அமமுக வேட்பாளர் ஆதிநாராயணன் உட்பட 4 பேரும் காணொலி காட்சி வழியாக ஆஜர்படுத்தப்பட்டனர்.

அப்போது, 4 பேருக்கும் அவர்கள் மீதான குற்றச்சாட்டு நகலை வழங்க உத்தரவிட்டு, அந்த குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஜூன் 14-ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.